புதுச்சேரி மாநில தலைமை அலுவலகம்
38, Main Road, Oulgreat,
Near KFC Moolakulam,
Puducherry-605009,
Puducherry - 605009.
Cell: 7810068421,9488420449

PRGI.NO.TNTAM/25/A1635
T/PN/2025/1216/7215/1419

# நீதிகதிர் எக்ஸ்பிரஸ்

NEETHIKATHIR EXPRESS
மறைக்கப்பட்ட செய்திகள் திறக்கப்படும்
காலை நாளிதழ்

நீதி கதிர் எக்ஸ்பிரஸ் சென்னை அலுவலகம்.
No.19\10 1st Floor
F1 ,7th Street, Nehru Colony,
Nanganallur, Chennai - 600061
Cell: 7810068421,9488420449
neethiPress@ gmail.com

மலர்: 01 | இதழ்: 165 | 20-12-2025 | சனி | பக்கம்- 4 | விலை- ரூ.5 | திருச்சி

Volum 01 | Issue: 165 | 20-12-2025 | Saturday | Pages - 4 | Price- Rs. 5 | Trichy

## நாடாளுமன்ற குளிர்கால கூட்டத்தொடர் நிறைவு: சபாநாயகர் அளித்த தேநீர் விருந்தில் பிரதமர் மோடி உள்ளிட்டோர் பங்கேற்பு



புதுடெல்லி: டிச. 20–

நாடாளுமன்ற குளிர்கால கூட்டத் தொடர் நேற்றுடன் (டிச., 19) முடிவடைந்த நிலையில், மக்களவை, மாநிலங்களவை ஆகிய இரு அவைகளும் தேதி குறிப்பிடாமல் ஒத்திவைக்கப்பட்டன. இதையொட்டி, மக்களவை சபாநாயகர் ஓம் பிர்லா அளித்த தேநீர் விருந்தில் பிரதமர் மோடி, காங்கிரஸ் எம்.பி. பிரியங்கா காந்தி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

நாடாளுமன்ற குளிர் கால கூட்டத்தொடர் டிசம்பர் 1ம் தேதி தொடங்கியது. கூட்டத் தொடர் தொடங்கிய நாள் முதலே எதிர்க்கட்சி எம்.பிக்கள் கடும் அமளியில் ஈடுபட்டனர்.

வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம், வந்தே மாதரம் விவ காரம், திருப்பரங்குன்றம் சர்ச்சை ஆகியவை குறித்தும் விவாதங்கள் நடைபெற்றன.

குறிப்பாக, 20 ஆண்டுகள் பழமையான மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்துக்கு மாற்றாக, புதிய ஊரக வேலை உறுதி திட்ட (விபிஜி ராம் ஜி) மசோதா மக்களவையில் நேற்று நிறைவேறியது. இந்த மசோதாவுக்கு காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் தொடக்கம் முதல் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றன. பின்னர், நாட்டில் அணுமின் உற்பத்தியை அதிகரிக்கும் நோக்கில், அணுசக்தித் துறையை தனியாருக்கு திறந்து விட மத்திய அரசு முடிவு செய்துள்ளது. இதற்காக 'இந்தியாவின் மாற்றத்துக்கான அணுசக்தி மேம்பாட்டு (சாந்தி) மசோதா நிறைவேற்றப்பட்டது. இதற்கும் எதிர்க்கட்சிகள் எதிர்ப்பு தெரிவித்தன.

இந்த நிலையில், நாடாளுமன்ற குளிர் கால கூட்டத்தொடர் நேற்றுடன் நிறைவு பெற்றது. மேலும், மக்களவை காலவரையறையின்றி ஒத்திவைக்கப்படுவதாக சபாநாயகர் ஓம்.பிர்லா அறிவித்துள்ளார்.

அவை கூடியதும் வந்தே மாதரம் பாடல் இசைக்கப்பட்ட பிறகு அவை ஒத்திவைக்கப் பட்டது. அதேபோல், மாநிலங்களவையிலும் அவை ஒத்தி வைக்கப் படுவதாக மாநிலங் களவை தலைவர் சி.பி.ராதாகிருஷ்ணன் அறிவித்தார். இதனால் நாடாளுமன்ற குளிர்கால கூட்டத் தொடர் நேற்றுடன் நிறைவடைந்தது.

இதையொட்டி, மக்களவை சபாநாயகர் ஓம் பிர்லா அளித்த தேநீர் விருந்தில் பிரதமர் மோடி, காங்கிரஸ் எம்.பி. பிரியங்கா காந்தி, திமுக எம்.பி.ஆ.ராசா உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

# 100 நாள் வேலை திட்ட விவகாரம்: வரும் 24ம்தேதி தி.மு.க. கூட்டணி கட்சிகள் ஆர்ப்பாட்டம்

சென்னை: டிச. 20–

100 நாள் வேலை திட்டத்தை ஒழிக்கும் சட்டத்தை திரும்பப் பெற வலியுறுத்தியும், சட்டத்தை கொண்டு வந்த ஒன்றிய பாஜக அரசையும் ஒத்து ஊதும் அதிமுகவையும் கண்டித்து வரும் 24ம் தேதி மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறும் என்று மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி அறிவித்துள்ளது. மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி கட்சிகள் இன்று வெளியிட்ட அறிவிப்பு:

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்புச் சட்டத்தை சிதைத்து, அதன் திட்டப்பணிகளை சீர்குலைத்து, நிதி ஒதுக்கீட்டை குறைப்பது, மாநிலங்களின் நிதிச்சுமையை அதிகரித்து திட்டத்தை முடக்குவது, வேலைநாட்களை குறைப்பது, பயனாளிகளின் எண்ணிக்கையை குறைப்பது, 'கிராமங்கள் தான் நம் நாட்டின் முதுகெலும்பு' என்ற அண்ணல் காந்தியடிகளின் பெயரை நீக்குவது, இந்தியை திணிப்பது என சட்டத்தை திருத்தியும்நூறு நாள் வேலையையே இனி இல்லாமல் செய்து கிராம மக்களின் வாழ்வாதாரத்தில் அழிக்கத் துடிக்கும் ஒன்றிய பாஜக அரசின் நாசகார சதிச் செயலையும்அதற்கு ஒத்து ஊதி தமிழ்நாட்டு மக்களுக்குத் துரோகம் செய்யும் அதிமுகவையும் கண்டித்தும், சட்டத்தை திரும்பப் பெற வலியுறுத்தியும் 'மதச் சார்பற்ற முற்போக்குக் கூட்டணி' சார்பில் வரும் 24ம் தேதி(புதன்கிழமை) காலை 10 மணியளவில், தலைநகர் சென்னையிலும்மாநிலத்தில் உள்ள அனைத்து திமுக ஒன்றியங்களிலும் 100 நாள் வேலைவாய்ப்பினால் பயன்பெறுவோரைத் திரட்டி "மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்"நடைபெறும்.

மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சிகளின் சார்பில் நடைபெறும் இக்கண்டன ஆர்ப்பாட்டத்தில், மாவட்டச் செயலாளர்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மாநில நிர்வாகிகள் தலைமையில் மாவட்ட நிர்வாகிகள் ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், வட்ட, கிளைக் கழகச் செயலாளர்கள் நிர்வாகிகள், அனைத்து அமைப்புகளில் உள்ள அணிகளின் நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் மதச் சார்பற்ற கூட்டணிக் கட்சியைச் சார்ந்த அனைத்து கூட்டணி அமைப்புகளின் நிர்வாகிகள் உள்ளிட்ட அனைவரும் பங்கேற்கின்ற வகையில், மாவட்ட கழகச் செயலாளர்கள் உரிய ஏற்பாடுகளைச் செய்து, தமிழ்நாடு மக்களை வஞ்சிக்கும் ஒன்றிய பாசிச பா.ஜ.க. அரசையும் ஒத்து ஊதும் அ.தி.மு.க.வைக் கண்டித்தும் முழக்கங்களை எழுப்பி ஆர்ப்பாட்டம் செய்திட வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். ஒழிக! ஒழிக! ஜி ராம் ஜி சட்டம் ஒழிக! தமிழ்நாடு போராடும்! தமிழ்நாடு வெல்லும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## கட்சிப் பொதுக் கூட்டங்கள், ரோடு ஷோக்களுக்கான இறுதி வழிகாட்டு நெறிமுறைகள்: ஜன.5க்குள் வெளியிட அரசுக்கு ஐகோர்ட் உத்தரவு

தமிழகத்தில் அரசியல் கட்சிகளின் பொதுக் கூட்டங்கள் மற்றும் ரோடு ஷோரு க்கள் தொடர்பான இறுதி வழிகாட்டு நெறிமுறைகளை ஜனவரி 5ம் தேதிக்குள் வெளியிட வேண்டும் என தமிழக அரசுக்கு சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கரூரில், கடந்த செப்டம்பர் 27ம் தேதி, தவெக தலைவர் விஜய் பிரச்சாரத்தில் ஏற்பட்ட கூட்ட நெரிசலில் சிக்கி, 41 பேர் பலியாகினர். இந்த சம்பவத்தை தொடர்ந்து, தமிழகத்தில் அரசியல் கட்சி தலைவர்களின் ரோடு ஷோ நிகழ்ச்சிகளுக்கும், பொதுக்கூட்டங்களுக்கும் வழிகாட்டு விதிமுறைகள் வகுக்கக் கோரி, தவெக அதிமுக மற்றும் தேசிய மக்கள் சக்தி கட்சிகளும், மதுரையைச் சேர்ந்த திருக்குமரன், பிரகாஷ் உள்ளிட்ட தனிநபர்களும் சென்னை உயர் நீதிமன்றத்தில் பொது நல வழக்குகளை தாக்கல் செய்திருந்தனர். இந்த வழக்குகளை விசாரித்த தலைமை நீதிபதி எம்.எம். ஸ்ரீவஸ்தவா மற்றும் நீதிபதி ஜி.அருள்முருகன் அடங்கிய அமர்வு பிறப்பித்த உத்தரவின் அடிப்படையில், 23 அங்கீகரிக்கப்பட்ட கட்சிகள், 40க்கும் மேற்பட்ட பதிவு செய்யப்பட்ட கட்சிகளின் கருத்துகளைப் பெற்று, பொதுக்கூட்டங்கள், ரோடு ஷோக்களுக்கான வழிகாட்டு நெறிமுறைகளை வகுத்து, நீதிமன்றத்தில் தாக்கல் செய்தது தமிழக அரசு. இந்த வழிகாட்டு நெறிமுறைகள் குறித்து அதிமுக, தவெக மற்றும் தேசிய மக்கள் சக்திக் கட்சி சார்பில் ஆலோசனைகளும் தாக்கல் செய்யப்பட்டிருந்தன. அரசியல் கட்சிகளின் ஆலோசனைகள் பரிசீலிக்கப்படும் என, அரசுத் தரப்பில் தெரிவிக்கப்பட்டிருந்தது. வழக்கில் விசாரணை முடிவடைந்ததைத் தொடர்ந்து, தீர்ப்பை தேதி குறிப்பிடாமல் தள்ளிவைத்திருந்தது, தலைமை நீதிபதி தலைமையிலான அமர்வு, தீர்ப்பளித்தது.

வழக்கில் நேற்று தீர்ப்பளித்த தலைமை நீதிபதி அமர்வு, ரோடு ஷோக்களுக்கு வழிகாட்டு நெறிமுறைகள் வகுப்பது தொடர்பாக வழக்கு தாக்கல் செய்திருந்த கட்சிகள் சார்பில் ஏராளமான ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டியது.

இந்த ஆலோசனைகளை பரிசீலித்து, ஜனவரி 5 ம் தேதிக்குள் வழிகாட்டு நெறிமுறைகளை அறிவிக்க வேண்டும் என தமிழக அரசுக்கு நீதிபதிகள் உத்தரவிட்டனர். அதன்பின், வழிகாட்டு நெறிமுறைகளில் ஏதேனும் ஆட்சேபங்கள் இருந்தால், அதுசம்பந்தமாக வழக்கு தாக்கல் செய்யலாம் எனவும் நீதிபதிகள் தங்கள் உத்தரவில் சுட்டிக்காட்டியுள்ளனர்.

## கிளாம்பாக்கத்தில் நள்ளிரவில் போராட்டத்தில் ஈடுபட்ட செவிலியர்கள்! ஆதவ் அர்ஜுனா நேரில் ஆதரவு!





சென்னை டிச 20

சென்னை : தமிழகம் முழுவதும் தொகுப் பூதியத்தில் பணிபுரியும் 1500 க்கும் மேற்பட்ட செவிலியர்கள் நேற்று சென்னையில் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

இந்நிலையில் சென்னை கிளாம்பாக்கம் பேருந்து நிலையத்தில், நேற்று நள்ளிரவில் 700 க்கும் மேற்பட்ட செவிலியர்கள் திடீர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர். இந்த ஆர்ப்பாட்டத்திற்கு தமிழக வெற்றி கழகத்தின் பொதுச்செயலாளர் ஆதவ் அர்ஜுனா நேரில் சென்று ஆதரவு தெரிவித்திருந்தார்.

போராட்டத்தில் ஈடுபட்டிருந்த செவிலியர்கள், திமுக அரசு தேர்தல் சமயத்தில் கொடுத்த வாக்குறுதியின் படி, தங்கள் பணிகளை நிரந்தரப்படுத்த வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளனர்.

சென்னை உயர்நீதிமன்ற உத்தரவின் மீதான மேல்முறையீட்டை கைவிட்டு, செவிலியர்களுக்கு வேலைக்கான ஊதியம் வழங்க வேண்டும் என்றும், செவிலியர் கண்காணிப்பாளர் நிலை 3 பணியிடங்களை மீண்டும் உருவாக்கிட வேண்டும் என்றும், கொரோனா பெருந் தொற்று காலத்தில் பணி செய்து, பின்னர் பணி நீக்கம் செய்யப்பட்ட அனைத்து செவிலியர்களுக்கும் மீண்டும் பணி வழங்க வேண்டும் என்றும், பட்டப்படிப்பு மற்றும் பட்டம் மேற்படிப்பு முடித்த செயலர்களுக்கு ஊதிய உயர்வு வழங்கிட வேண்டும் எனவும், பணி நிரந்தரம் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தியும் செவிலியர்கள் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதனையடுத்து நேற்று இந்த கோரிக் கைகளை வலியுறுத்தி சென்னை சிவானந்தா சாலையில் உண்ணா விரத போராட்டத்தை தொடங்கினர். மாலை 6 மணி ஆனதை தொடர்ந்து செவிலியர்களை கலைந்து செல்லுமாறு போலீசார் அறிவுறுத்தினர். ஆனால் செவிலியர்கள் கலைந்து செல்ல மறுத்தனர். இனையடுத்து அவர்களை கைது செய்த போலீசார், கிளாம்பாக்கம் அருகே பேருந்தில் அழைத்து சென்று விடுவித்தனர்.

### கிளாம்பாக்கத்தில் நள்ளிரவில் பரபரப்பு !

# செவிலியர்கள் போராட்டம்: மின் நிறுத்தம்! செவிலியர்கள் கைது!







சென்னை டிச 20

தங்களது கோரிக்கைகள் நிறைவேறாமல் கிளம்ப மாட்டோம் என கிளாம்பாக்கம் பேருந்து நிலையத்தில் அமர்ந்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்."

தமிழ்நாடு செவிலியர்கள் மேம்பாட்டு சங்கத்தின் சார்பில் சென்னை சிவானந்தா சாலையில், பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி உண்ணாவிரதப் போராட்டம் நேற்று நடைபெற்றது. இந்தப் போராட்டத்தில் தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களைச் சேர்ந்த ஆயிரத்திற்கும் மேற்பட்ட செவிலியர்கள் கலந்துக் கொண்டனர்.

திமுகவின் தேர்தல் 356 வாக்குறுதியின் படி ஆட்சிக்கு வந்தால் செவிலியர்களை பணி நிரந்தரம் செய்வோம் என திமுக வாக்குறுதி அளித்தது. ஆனால், இதுவரை அது நடக்கவில்லை. மேலும், எங்களுக்கு சாதகமான சமவேலைக்கு சம ஊதியம் என்ற உயர்நீதிமன்றத் தீர்ப்பை எதிர்த்து உச்சநீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்துள்ளது.

இந்தநிலையில் பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி உண்ணாவிரத போராட்டத்தில் ஈடுபட்டனர். குறிப்பாக சென்னை உயர்நீதிமன்ற உத்தரவின் மீதான மேல் முறையீட்டை கைவிட்டு, செவிலியர்களுக்கு சம வேலைக்கு சம ஊதியம் வழங்க வேண்டும். செவிலியர் கண்காணிப்பாளர் நிலை 3 பணியிடங்களை மீண்டும் உருவாக்கிட வேண்டும்.

கொரோனா காலகட்டத்தில் பணி செய்து பணி நீக்கம் செய்யப்பட்ட அனைத்து செவிலியர்களுக்கும் மீண்டும் பணி வழங்க வேண்டும். பட்டப் படிப்பு மற்றும் பட்ட மேற்படிப்பு முடித்த செவிலியர்களுக்கு ஊதிய உயர்வு வழங்கிட வேண்டும். செவிலியர்களுக்கு 7,14,20 மற்றும் 25 ஆண்டுகளில் பதவி உயர்வுக்கான ஊதிய நிர்ணயம் செய்திட வேண்டும். அனைத்து அரசு மருத்துவக் கல்லூரிகளிலும் செவிலியர் கல்லூரிகள் உருவாக்கிட வேண்டும். எம்.ஆர்.பி தொகுப்பூதிய செவிலியர்களுக்கு ஊதியத்துடன் கூடிய மகப்பேறு விடுப்பு வழங்க வேண்டும்.

கருவூலம் மூலம் ஊதியம் பெறும் தொகுப்பூதிய செவிலியர்களுக்கு ரூ. 18000 ஊதியம் நிலுவைத் தொகையுடன் வழங்க வேண்டும். ஆரம்ப சுகாதார நிலையங்களில் நிரந்தரச் செவிலியர் மற்றும் செவிலியர் கண்காணிப்பாளர் பணியிடங்களை உருவாக்கிட வேண்டும் என கோரிக்கைகளை வலியுறுத்தினர்.

சுமார் ஆயிரத்துக்கும் மேற்பட்ட செவிலியர்கள் உண்ணாவிரத போராட்டத்தில் ஈடுபட்ட நிலையில், இரவு 7:30 மணிக்கு அவர்களை போலீசார் கைது செய்து பேருந்துகள் மூலமாக அழைத்து கிளாம் பாக்கம் பேருந்து நிலையத்தில் இறக்கிவிட்டனர்.

தொடர்ந்து செவிலியர்கள் விளம்பக்கம் பேருந்து நிலையத்திலும் தங்களது கோரிக்கைகளை நிறைவேறாமல் கலைய மாட்டோம் என கூறி திமுக அரசுக்கு எதிரான கண்டன முழக்கங்களை எழுப்பி பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி நடைமேடையில் அமர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தொடர்ந்து நள்ளிரவிலும் தங்களது கோரிக்கைகளை நிறைவேற்றகோரிபோராட்டத்தில், ஈடுபட்ட நிலையில்,கிளாம்பாக்கம் பேருந்து முனைய நிர்வாகம் திடீரென மின் இணைப்பை துண்டிப்பு செய்தது. இருந்த போதிலும் தங்களது கைகளில் இருந்த கைபேசியில் மூலம் ஒளிர செய்து தொடர்ந்து கண்டன முழுகங்களை எழுப்பி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

நள்ளிரவு முதல் சுமார் 5 மணி நேரத்திற்கு மேலாக போராட்டம் நடைபெற்று வந்த நிலையில், போலீசார் கைது செய்து பேருந்து மூலம் அழைத்து சென்று ஊரப்பாக்கம் பகுதியில் உள்ள தனியார் திருமண மண்டபத்தில் தங்க வைத்துள்ளனர். செவிலியர்கள் போராட்டம் மற்றும் செவிலியர்கள் கைது சம்பவத்தால் கிளாம்பாக்கம் பேருந்து நிலையத்தில் பரபரப்பு ஏற்பட்டது.



விழுப்புரம் மாவட்டம் மேல்மலையனூர் தாலுக்கா ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி சைக்கிள் வழங்கும் விழாவிற்கு வருகை தந்த செஞ்சி கே எஸ் மஸ்தான் எம்எல்ஏ அவர்களுக்கு பள்ளியில் பிள்ளைகள் நன்றாக படிக்க வேண்டும் என்று சிறப்புரை ஆற்றினார் வெகு தொலைவில் நடந்து வரும் பிள்ளைகளுக்காக சைக்கிள் வழங்கினார் அருகில் சேர்மன் கண்மணி நெடுஞ்செழியன் அவர்கள் தலைமையில் தலைவர் வெங்கடேசன் துணைத்தலைவர் சரவணன் வார்டு நம்பர் ரஹ்மத்துல்லா இவர்கள் தலைமையில் மேல்மலையனூரில் உள்ள சைக்கிள் வழங்கும் விழாவிற்கு வருகை தந்து அனைவரும் தலைமை ஆசிரியர் திருமால் அவர்கள் பள்ளியில் சிறப்புரை ஆற்றினார் ஆசிரியர்களும் கலந்து கொண்டனர்.

# ஈரோடு மொடக்குறிச்சி தொகுதியில் புதிய குடிநீர் தொட்டி திறப்பு விழா... தொகுதி எம்எல்ஏ டாக்டர் சி. சரஸ்வதி திறந்து வைத்தார்.



ஈரோடு, டிச. 20–

ஈரோடு மாவட்டம் மொடக்குறிச்சி சட்ட மன்ற தொகுதிக்குட் பட்ட லக்காபுரம் பகுதியில் அமைக்கப் பட்ட குடிநீர் தொட்டியை தொகுதி எம்எல்ஏ டாக்டர் சி. சரஸ்வதி திறந்து வைத்தார்.

ஈரோடு மாவட்டம் மொடக்குறிச்சி லக்காபுரம், கரூர் செல்லம் சாலையில் கார்னிஷ் கிளப் அருகே, களப்பாரை காடு பகுதியில் புதிதாக அமைக்கப்பட்ட குடிநீர் தொட்டியை திறந்து. பொதுமக்களுக்கு குடிநீர் விநியோகத்தை மொடக்குறிச்சி சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் சி. சரஸ்வதி அவர்கள் பொது மக்களுக்கு குடிநீர் வழங்கி பொது மக்களிடம் பேசினார்.

அப்போது அவர் பேசியதாவது... நீரின்றி அமையாது உலகு என்று சொல்வது. காரணம் நீர் இல்லாமல் எதுவும் இல்லை. அதன் அடிப்படையில் இப்பகுதி மக்களின் நீண்ட நாள் கோரிக்கை ஏற்று இன்றைக்கு இந்த நீர்த்தேக்க தொட்டியை திறந்து வைத்துள்ளேன். பொதுமக்கள் குடிநீரை வீணாக்காமல் தங்களின் தேவைகளுக்கு இதனை பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று. இவ்வாறு அந்த விழாவில் மொடகொத்தி எம்எல்ஏ டாக்டர் சி சரஸ்வதி பேசினார்

பின்னர் அப்பகுதி பொதுமக்கள் சார்பில் அவருக்கு சால்வை அனுபவிக்கப்பட்டு, பாராட்டும் நன்றியும் தெரிவிக்கப்பட்டது.

# மணப்பாறையில் பறித்து போடப்பட்ட சாலையில் கடும் புழுதியால் பள்ளி மாணவ மாணவிகள் கடும் அவதி

## கண்டு கொள்ளாத நெடுஞ்சாலைதுறை அதிகாரிகள்.



திருச்சி. டிச. 20–

திருச்சி மாவட்டம், மணப்பாறையில் உள்ள கோவில்பட்டி சாலை என்பது நகரின் மிக முக்கியமான பிரதான சாலை. இந்த சாலையில் தான் தனியார் பள்ளி, அரசு உதவி பெறும் தனியார் பள்ளிகள் உள்ளதால் தினமும் 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாணவ மாணவிகள் சென்று வருகின்றனர். இதட்டுமின்றி தனியார் ஆலை மற்றும் நிறுவனங்கள் உள்ளதால் ஆயிரக்கணக்கான மக்கள் சென்று வரும் பிரதான சாலையும் இந்த கோவில்பட்டி சாலை தான், கூட்டுறவு சங்கம், மருத்துவ மனை, சுற்று வட்டாரத்தில் உள்ள 500 க்கும் மேற்பட்ட கிராமங்களை இணைக்கும் இந்த பிரதான சாலையில் காமராஜர் சிலை அருகே இருந்து புதுகாலனி அருகே வரை சாலையின் மேல் பரப்பு பறிக்கப்பட்டு ஜல்லிக் கற்கள் சாலை முழுவதுமாக சிதரிக்கிடக்கிறது. ஆயிரக்காண வாகனங்கள் செல்லும் பிரதான சாலை என்பதால் சிறிய வாகனம் முதல் கனரக வாகனங்கள் வரை செல்லும் போது புழுதி பறந்து அந்த சாலையிலேயே செல்ல முடியாத அளவு உள்ளது. பள்ளி மாணவ மாணவிகள் மற்றும் சாலையில் செல்வோர் முகத்தை மூடிக் கொண்டு கண்களை மூடிக் கொள்ளும் நிலையும் உள்ளது. குழந்தைகள் முதல் முதியவர்கள் வரை செல்லும் இந்த சாலையில் அதிக அளவு புழுதி பரப்பதால் மூச்சு கூட விட முடியாத நிலையும் உள்ளது. ஆனால் இதை பற்றி நெடுஞ்சாலை துறை அதிகாரிகள் கண்டுகொள்ளாமல் உள்ளனர். இதனால் அனைத்து தரப்பு மக்களும் வேதனைக்கு ஆளாகும் நிலையும், சறுக்கி விழுந்து விபத்தில் சிக்கி பாதிக்கப்படும் நிலையும் தொடர்ந்து கொண்டே தான் இருக்கிறது. இதுபோன்ற சாலைகளில் பணிகள் மேற்கொள்ளும் போர்க்கால அடிப்படையில் மேற்கொள்ள வேண்டும். ஆனால் மாணவ மாணவிகள் மற்றும் அனைத்து தரப்பு மக்களும் படும் சிரமத்தை கண்டு கொள்ளாமல் இருக்கும் நெடுஞ்சாலை துறை அதிகாரிகளின் அலட்சியத்திற்கு மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுத்து உடனடியாக சாலை அமைத்திட மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# கொங்குநாடு ஜனநாயக கழகத்தின் வடக்கு மாவட்ட அலுவலகம் திறப்பு விழா.



கோவை டிசம்பர்.20

கொங்கு நாடு ஜனநாயக கழக மாவட்ட புதிய அலுவலகம் திறப்பு விழா கட்சியின் மாநில பொதுச் செயலாளர் கொங்கு செ.ஜெயராமன் தலைமையில் நடைபெற்றது.

அலுவலகத்தை கொங்குநாடு ஜனநாயக கழக அவைத் தலைவர் இரா.முத்துசாமி ரிப்பன் வெட்டி திறந்து வைத்தார். மாநில பொருளாளர் எம்.ஆர்.குமார், திருப்பூர் மாவட்ட செய்தி தொடர்பாளர் விவேக்ராஜ், மாநில இளைஞர் அணிச் செயலாளர் நவீன் குமார் ஆகியோர் உடன் இருந்தனர்.

# திருவரங்கம் ரங்கநாதர் கோவிலில் இங்கிலாந்து பெண் பக்தை மயங்கி விழுந்து சாவு போலீசார் விசாரணை:

திருச்சி டிச 20

இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்தவர் சவுலா , இவரது மனைவி நிஷா சவுலா வயது (60) ,இவர் தனது சகோதரர் பிரதீப் குமார் சவுத்ரியுடன் கடந்த சில தினங்களுக்கு முன்பு இந்தியாவுக்கு வந்தனர். பின்னர் இந்தியாவின் பல்வேறு பகுதிகளுக்கு சுற்றுலா சென்ற பின்னர் அண்ணன் ,தங்கை இருவரும் திருவரங்கம் ரங்கநாதரை தரிசிப்பதற்காக ரங்கநாதர் கோவிலுக்கு வந்தனர், ரங்கா ரங்கா ராஜகோபுரம் அருகே சென்ற போது நிஷா சாவ்லா திடீரென மயங்கி விழுந்தார் .உடனே சகோதரர் அவரை மீட்டு திருவரங்கம் அரசு மருத்துவமனையில் சேர்த்தார், அங்கு (டாக்டர்கள்) மருத்துவர்கள் பரிசோதனையில் அவர் சிகிச்சைக்கு வரும் வழியில் இறந்து விட்டதாக தெரிவித்தனர்.சம்பவம் குறித்து திருவரங்கம் போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# வேலூரில் எல்ஐசி ஊழியர்கள் ஆர்ப்பாட்டம்






வேலூர், டிச 20

அகில இந்திய இன்சூரன்ஸ் ஊழியர்கள் சங்கம் சார்பில் இன்சூரன்ஸ் உள்ளிட்ட பொதுத்துறை நிறுவனங்களில் 100விழுக்காடு அந்நிய நேரடி முதலீட்டை அனுமதிக்கும் மசோதாவை நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்த ஒன்றிய அரசை கண்டித்தும், அதனை திரும்ப பெற வலியுறுத்தியும் வேலூர் கோட்ட அலுவலகம் முன்பு கோட்ட பொதுச் செயலாளர் எஸ்.பழனிராஜ் தலைமையில் உணவு இடைவேளை நேர ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இன்சூரன்ஸ் ஊழியர் சங்க அகில இந்திய செயற்குழு உறுப்பினர் எஸ்.ராமன் வங்கி ஊழியர் சங்க மாநில தலைவர் சண்முகம் எல்ஐசி முதல் நிலை அதிகாரிகள் சங்க கோட்ட செயலாளர் ரவிச்சந்திரன் எல்ஐசி ஓய்வூதியர்கள் சங்க மாவட்ட செயலாளர் கேசவன் ஆகியோர் கோரிக்கைகளை வலியுறுத்தி பேசினர். இதில் கோட்ட சங்க நிர்வாகிகள் குணாளன் ரமேஷ்பாபு பாலகுமார், ஜெயகாந்தம் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்



வேலூரை அடுத்த விரிஞ்சிபுரம் NH ல் ஆம்பூரிலிருந்து வேலூர் நோக்கி சென்று கொண்டிருந்த கார் மற்றொரு கார் மீது மோதி விபத்துக்குள்ளாதில் காரில் சென்ற மூன்று நபர்களில் ஒருவர் சம்பவ இடத்திலேயே பலி. இரண்டு பேர் பலத்த காயம் ஏற்பட்டு வேலூர் அரசு மருத்துவமனைக்கு 108 ஆம்புலன்ஸ் மூலம் வேலூர் அடுக்கம்பாறை மருத்துவமனைக்கு அனுப்பபட்டுள்ளனர். இதுகுறித்து விரிஞ்சிபுரம் போலீசார் விசாரணை மேற்கொண்டு வருகிறார்கள.

# புதுச்சேரி நெட்டப்பாக்கம் ஆரம்ப சுகாதார நிலையத்தில் தடுப்பூசி செலுத்திய 3 மாத குழந்தை உயிரிழந்த நிலையில் குழந்தையின் பெற்றோரை லட்சிய ஜனநாயக கட்சி தலைவர் ஜோஸ் சார்லஸ் மார்டின் நேரில் சந்தித்து



புதுச்சேரி, டிச. 20–

புதுச்சேரி நெட்டப்பாக்கம் ஆரம்ப சுகாதார நிலையத்தில் தடுப்பூசி செலுத்திய 3 மாத குழந்தை கடந்த டிசம்பர் 5ம் தேதி உயிரிழந்த நிலையில், குழந்தையின் பெற்றோரை லட்சிய ஜனநாயக கட்சி தலைவர் ஜோஸ் சார்லஸ் மார்டின் நேரில் சந்தித்து ஆறுதல் கூறி, கட்சி சார்பில் ரூ. 1 லட்சம் நிவாரண உதவியும் வழங்கினார்.

புதுச்சேரி, நெட்டப்பாக்கம் அடுத்த ஏரிப்பாக்கம் புது காலணியை சேர்ந்தவர் அருண். அவர் மனைவி நதியா. இவர்களுக்கு 3 மாதம் முன் ஆண் குழந்தை பிறந்தது.

அனுஷ் என்ற அந்த குழந்தைக்கு கடந்த டிசம்பர் 4ம் தேதி நெட்டப்பாக்கம் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் 2வது தடுப்பூசி போடப்பட்டது.

அதனால் குழந்தைக்கு காய்ச்சல் உண்டானது. முறையான மருத்துவ வசதி கிடைக்காததால் அந்த குழந்தை டிசம்பர் 5ம் தேதி இறந்தது. இந்த சம்பவம் புதுச்சேரியில் பெரும் அதிர்ச்சியை உண்டாக்கியது. இந்நிலையில் உயிரிழந்த குழந்தையின் குடும்பத்தினரை லட்சிய ஜனநாயக கட்சி தலைவர் ஜோஸ் சார்லஸ் மார்டின் நேரில் சந்தித்தார்.

இறந்த குழந்தையின் படத்தைக் காட்டி பெற்றோர்களும், உறவினர்களும் அழுதனர். அவர்களுக்கு ஜோஸ் சார்லஸ் மார்டின் ஆறுதல் கூறினார்.

மேலும் லட்சிய ஜனநாயக கட்சி சார்பில் 1லட்சம் ரூபாய் நிவாரணமும் வழங்கினார்.

இந்த நிகழ்ச்சியின் போது சட்டமன்ற உறுப்பினர் அங்காளன், எல்.ஜே.கே. கட்சி பொது செயலாளர்கள் பூக்கடை ரமேஷ், பிரபாகரன், மண்டல பொது செயலாளர் முனைவர் கண்ணபிரான், சுரேஷ் உள்ளிட்ட நிர்வாகிகள் உடன் இருந்தனர்.

குடும்பத்தினருக்கு ஆறுதல் தெரிவித்தது குறித்து எல்ஜேகே தலைவர் ஜோஸ் சார்லஸ் மார்ட்டின் கூறியது, பெற்றோரை சந்தித்து ஆறுதல் கூறினோம். எங்களால் முடிந்த உதவி செய்தோம். ஆனால் புதுச்சேரி அரசு நெட்டப்பாக்கம் மருத்துவமனைக்கு இன்னும் டாக்டர்களை நியமிக்கவில்லை. குழந்தையின் உடல் கூராய்வு அறிக்கை கூட இதுவரை தரவில்லை.

ஆட்சியாளர்களும், அதிகாரிகளும் இந்த அளவு அலட்சியமாக இருப்பது கடும் கண்டனத்துக்கு உரியது. ஓட்டு போட்ட மக்களுக்கு உதவி செய்யாமல் இருப்பது துரோகம். வரும் தேர்தலில் மக்கள் இதற்கு மீண்டும் வாக்குகள் மூலம் பதில் அளிப்பார்கள் என்று கூறினார்.

# ஈரோடு வா. ஊ. ச் பூங்கா ஆஞ்சநேயர் கோவிலில் அனுமன் ஜெயந்தி விழா : ஆயிரக்கணக்கான பக்தர்கள் சாமி தரிசனம்...



ஈரோடு. டிச. 20

ஈரோட்டில் உள்ள வா. ஊ. சி பூங்காவில் நேற்று நடைபெற்ற அனுமன் ஜெயந்தி விழாவில் ஆயிரக்கணக்கான பொதுமக்கள் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர்.

ஈரோட்டில் பல்வேறு கோவில்கள், திருத்தலங்கள் புகழ் பெற்று விளங்கி வருகிறது. அதில் ஒன்றாக கருதப்படும் ஈரோடு வா. உ. சிதம்பரனார் பூங்காவில் அமைந்துள்ள ஆஞ்சநேயர் கோவில் ஒன்று. எங்கே நாள்தோறும் பக்தர்கள் வருகை தந்து ஆஞ்சநேயர் சுவாமியை வழிபட்டு செல்வது வழக்கம்.

அதிலும் குறிப்பாக சனிக்கிழமை மற்றும் அம்மாவாசை தினங்களில் மிக அதிக அளவில் பொதுமக்கள் பக்தர்கள் இங்கு வந்து, பூங்கா வளாகத்தில் அமைந்துள்ள ஆஞ்சநேயர் சுவாமிகளை அதிக அளவில் வணங்கி தரிசித்து செல்வது வழக்கம்.

இந்த நிலையில் நேற்று ஆஞ்சநேயர் சுவாமிக்கு உகந்த தினமாக கருதப்படும், ஹனுமான் ஜெயந்தி விழா மிக விமர்சையாக கொண்டாடப்பட்டது.

அனுமன் ஜெயந்தி விழாவை முன்னிட்டு அங்கு அமைக்கப் பட்டுள்ள ஆஞ்சநேயர் சுவாமிக்கு தங்க அலங்காரம், வெள்ளி அலங்காரம் செய்யப் பட்டு பக்தர்கள் வடமாலை சாத்தி தரிசனம் செய்தனர்.

அனுமன் ஜெயந்தி விழாவை முன்னிட்டு, ஆஞ்சநேயர் சுவாமியை தரிசிக்க ஆயிரக் கணக்கான பொதுமக்கள் வந்திருந்த நிலையில், அதிக அளவில் போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப் பட்டனர்.

அனுமன் ஜெயந்தி விழாவில் கலந்து கொண்ட அனைத்து பக்தர்களுக்கும் குடிநீர் மற்றும் அன்னதானம் வழங்கப்பட்டது.

இந்த அனுமன் ஜெயந்தி விழாவிற்கான ஏற்பாடுகளை அறங்காவலர் குழு தலைவர் கோ. பாஸ்கரன் கோவில் செயல் அலுவலர் க. கயல்விழி, அறங்காவலர்கள் குழு உறுப்பினர்கள் வ. சந்தான ராஜு, ச. சுரேஷ்,க. லட்சுமி, செ. சிவகாமி உள்ளிட்ட விழா குழுவினர் விழா விற்கான ஏற்பாடுகளை மிகச் சிறப்பாக செய்திருந்தனர்.

# இராமநாதபுரம் மாவட்டத்தில் ஜன.2ந்தேதி உள்ளூர் விடுமுறை

ராமநாதபுரம். டிச. 20–

இராமநாதபுரம் மாவட்டம் கீழக்கரை வட்டம், திருஉத்திரகோசமங்கை கிராமத்தில் உள்ள அருள்மிகு ஸ்ரீமங்களநாதசுவாமி திருக்கோவிலில் வருகின்ற 02.01.2026 (வெள்ளிக்கிழமை) அன்று ஆருத்ரா தரிசன விழா நடைபெறுகிறது. இதனை முன்னிட்டு அன்றைய தினம் இராமநாதபுரம் மாவட்டத்திற்கு உள்ளூர் விடுமுறை அளித்தும். அதனை ஈடுசெய்யும் விதமாக 10.01.2026 (சனிக்கிழமை) பணி நாளாக அறிவித்தும் மாவட்ட ஆட்சியர் சிம்ரன் ஜித் சிங் காலோன் உத்தரவிட்டுள்ளார்.

# சேலம் பொதுக் குழுவில் தேர்தல் கூட்டணி அறிவிப்பை வெளியிடுவார் ராமதாஸ்: ஜி.கே.மணி தகவல்

சேலம். டிச. 20–

சேலத்தில் வரும் 29ஆம் தேதி நடைபெறும் பாமக செயற்குழு,பொதுக் குழுவில் தேர்தல் கூட்டணி குறித்து கட்சியின் நிறுவனர் ராமதாஸ் அறிவிப்பார் என பாமக கௌரவத் தலைவர் ஜி.கே. மணி கூறினார்.




சேலம் சூரமங்கலத்தில் உள்ள மேற்கு தொகுதி அலுவலகத்தில் பாமக கௌரவத் தலைவர் ஜி.கே. மணி செய்தியாளர்களிடம் கூறியதாவது:

பாமக செயற்குழு, பொதுக்குழு கூட்டம் சேலத்தில் வரும் 29 ஆம் தேதி நடைபெறுகிறது. இக்கூட்டத்தில் பாமக எந்த கட்சியுடன் கூட்டணி அமைக்கும் என்பதை மருத்துவர் ராமதாஸ் அறிவிப்பார். ராமதாஸ் தலைமையில் தான் பாமக இயங்குகிறது. கட்சி நிறுவனர் ஒப்புதல் இல்லாமல் கூட்டம் நடத்தக் கூடாது என கட்சி விதி உள்ளது. பாமகவை தான் இயக்குவதாகக் கூறும் குற்றச்சாட்டு தவறானது.

அன்புமணி மீது முறைகேடு புகார் குறித்து சிபிஐ விசாரணை நடத்த வேண்டும் என்று நாங்கள் கூறவில்லை. அப்படி எந்த தீர்மானமும் நிறைவேற்றவில்லை. கட்சியில் தலைவர் பதவிக்கு, தேர்தல் ஆணையத்துக்கு தவறான கடிதம் கொடுத்தது குறித்து சி.பி.ஐ விசாரிக்க வேண்டும் என்றுதான் கூறினோம்.

தந்தையும், மகனும் ஒன்றுசேர்ந்தால் நான் கட்சியை விட்டு விலகுகிறேன். நானோ,எனது குடும்பத்தினரோ கட்சியில் இருக்க மாட்டோம். வேறு கட்சிக்கும் செல்ல மாட்டோம். தேர்தலில் போட்டியிட அன்புமணி விருப்ப மனு வாங்குவது தவறு. அதை அன்புமணி தரப்பு வாங்கக் கூடாது. அதன்மீது நீதிமன்றத்தை நாடுவது குறித்து ராமதாஸ் முடிவு செய்வார்.

பாமகவின் அடையாளம் ராமதாஸ்தான். அவர் சொல்பவருக்குதான் மக்கள் வாக்காளிப்பார்கள். வரும் செயற்குழு, பொதுக் குழுவில் கூட்டணி குறித்து அறிவிப்போம். நாங்கள் எந்தக் கூட்டணியில் இருக்கிறோமோ அவர்கள்தான் முதல்வர் ஆவார்கள்.

அன்புமணிக்கு என் மீது கோபமோ, வருத்தமோ இல்லை. நான் ராமதாஸுடன் இருக்கக் கூடாது என்று நினைக்கிறார். பாமகவுக்கு மாம்பழம் சின்னம் கிடைக்காவிட்டால் என்ற கேள்விக்கு, பாமகவிற்கு மாம்பழ சின்னத்தை தேர்தல் ஆணையம் ஒதுக்கிவிட்டது.

முகவரிதான் மாறி சென்றுள்ளது. முகவரியை மாற்றி கடிதம் அனுப்புமாறு தேர்தல் ஆணையத்துக்கு கடிதம் கொடுத்துள்ளோம். அங்கிருந்து கடிதம் வந்தால் சின்னம் எங்களுக்கு ஒதுக்கப்படும். சேலத்தில் நடைபெறும் பாமக பொதுக்குழு செயற்குழுவுக்கு அடையாள அட்டை வழங்கப்படும். அடையாள அட்டை உள்ளவர்கள் மட்டும் அனுமதிக்கப்படுவர் என்றார்.

பேட்டியின்போது எம்எல்ஏ இரா. அருள், மாவட்டச் செயலாளர் கதிர் ராஜரத்தினம் உள்ளிட்ட நிர்வாகிகள் உடனிருந்தனர்.

## நல்லான் பிள்ளை பெற்றால், சத்தியமங்கலம் அரசு மேல்நிலைப்பள்ளியில் 11ஆம் வகுப்பு படிக்கும் 301 மாணவர்களுக்கு விலையில்லா மிதி வண்டிகளை முன்னால் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்எல்ஏ வழங்கினார்.



விழுப்புரம், டிச. 20–

விழுப்புரம் மாவட்டம் செஞ்சி ஒன்றியம் சத்தியமங்கலம், நல்லான் பிள்ளை பெற்றால் அரசு மேல்நிலைப் பள்ளியில் பதினோராம் வகுப்பு படிக்கும் மாணவர்களுக்கு தமிழ்நாடு அரசின் விலையில்லா மிதிவண்டிகள் வழங்கும் நிகழ்ச்சி பள்ளி வளாகத்தில் நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார் தலைமை தாங்கினார் . பள்ளி தலைமை ஆசிரியர்கள் நல்லான் பிள்ளை பெற்றால் கோவிந்தராஜ், சத்தியமங்கலம் சச்சிதானந்தம் ஆகியோர் அனைவரையும் வரவேற்றனர். நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்எல்ஏ கலந்து கொண்டு நல்லான் பிள்ளை பெற்றால் அரசு மேல்நிலைப் பள்ளியில் படிக்கும் 60மாணவர்களுக்கும் சத்தியமங்கலம் அரசு மேல்நிலைப் பள்ளியில் படிக்கும் 241 மாணவ மாணவிகளுக்கு தமிழ்நாடு அரசின் விலையில்லா மிதிவண்டிகளை வழங்கி சிறப்புரை ஆற்றினார்.

நிகழ்ச்சியில் செஞ்சி மேற்கு ஒன்றிய செயலாளர் பச்சையப்பன், மாவட்ட கவுன்சிலர் அகிலா பார்த்திபன், ஒன்றிய கவுன்சிலர்கள் முரளி,டிலைட்,ஊராட்சி மன்ற தலைவர் அபர்ணா ரவிசங்கர், துணைத் தலைவர் சித்ரா ரவி, ஒன்றிய நிர்வாகிகள் வாசு, கதிரவன், சுதா பாஸ்கரன், சத்தியமங்கலம் அரசு மேல்நிலைப்பள்ளி பெற்றோர் ஆசிரியர் கழக தலைவர்சிற்றரசு, பள்ளி மேலாண்மை குழு தலைவர்கள், கல்பனா, அம்சலேகா, நிர்வாகிகள்நேதாஜி, மலர்மன்னன், மோகன், கண்ணதாசன்,இருபால் ஆசிரியர் பெருமக்கள், மாணவர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## அரியலூர் முன்னாள் காஞ்சிபுரம் மாவட்ட அமர்வு நீதிமன்ற நீதிபதி மீதான பணியிடை நீக்க உத்தரவை சென்னை உயர்நீதிமன்றம் திரும்ப பெற வலியுறுத்தி அரியலூர் வழக்கறிஞர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்



காஞ்சிபுரம். டிச. 20–

காஞ்சிபுரம் மாவட்ட அமர்வு நீதிபதி நீதிமன்ற நீதிபதியாக பணியாற்றிய செம்மல் கடந்த செப்டம்பர் 8ம் தேதி எஸ்சி எஸ்டி பிரிவின் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டு உரிய விசாரணை மேற்கொள்ளாமல் இருந்த டிஎஸ்பி சங்கர் கணேஷை 15 நாள் நீதிமன்ற காவலில் வைக்க உத்தரவிட்டார். இதனையடுத்து டிஎஸ்பி சங்கர் கணேஷ் மற்றும் காவல் துறை சார்பில் சென்னை உயர்நீதி மன்றத்தில் மேல்முறையீடு செய்யப்பட்டது. மேல் முறையீட்டு விசாரணையில் காஞ்சிபுரம் மாவட்ட அமர்வு நீதிமன்ற நீதிபதி செம்மல் பிறப்பித்த உத்தரவை ரத்து செய்த சென்னை நீதிமன்ற நீதிபதிகள் அவரை காஞ்சிபுரம் மாவட்ட அமர்வு நீதிமன்ற நீதிபதி பொறுப்பில் இருந்து விடுவித்து அரியலூர் நிரந்தர மக்கள் நீதிமன்ற தலைவராக பணியிடை மாற்றம் செய்து விஜிலென்ஸ் விசாரணைக்கும் உத்தரவிட்டனர் இந்நிலையில் முன்னாள் காஞ்சிபுரம் மாவட்ட அமர்வு நீதிமன்ற நீதிபதி செம்மலை பணியிடை நீக்கம் செய்து சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டது இதனால் அதிர்ச்சி அடைந்த அரியலூர் வழக்கறிஞர்கள் சங்கத்தினர் முன்னாள் காஞ்சிபுரம் மாவட்ட அமர்வு நீதிமன்ற நீதிபதி மீதான பணியிட நீக்க உத்தரவை திரும்ப பெற வேண்டும். அவர் மீதான விசாரணையில் அவரிடம் எவ்வித விளக்கமும் கேட்காமல் பழிவாங்கும் நோக்கில் ஒரு தலைப்பட்சமாக சென்னை உயர்நீதிமன்றம் செயல்பட்டு உள்ளது. நீதிபதி செம்மல் சட்டத்திற்கு உட்பட்டு எந்தவிதமான அழுத்தத்திற்கும் ஆளாகாமல் நேர்மையான முறையில் செயல்பட்டு வந்துள்ளார் எனவே இவர் மீதான வழக்கினை வேறு மாநில நீதிபதிகளை கொண்டு விசாரணை செய்ய வேண்டும் எனவும் ஆர்ப்பாட்டத்தில் வலியுறுத்தினர். ஆர்ப்பாட்டத்தில் அரியலூர் ஒருங்கிணைந்த நீதிமன்ற வழக்கறிஞர்கள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்

## ஏர்போர்ட் பகுதியில் பரிதாபம்,வெல்டிங் பணியின் போது தவறி விழுந்த பட்டதாரி சிகிச்சை பலனின்றி உயிரிழப்பு:

திருச்சி டிச.20

திருச்சி ஏர்போர்ட் செம்பட்டு மேற்கு தெரு பகுதியைச் சேர்ந்தவர் , ஸ்ரீனிவாசன் இவரது மகன் கௌதம் வயது (18 ),அவர் இவர் திருச்சியில் உள்ள ஒரு தனியார் கல்லூரியில் டிப்ளமோ முடித்தார் . பின்னர் அவரது மாமனார் நல்லசாமி என்பவர் உடன் கடந்த மூன்று மாதங்களாக வெல்டிங் பட்டறையில் வேலை பார்த்து வந்தார், ஏர்போர்ட் மொராய்ஸ் சிட்டி நுழைவாயில் பகுதியில் நடந்த ஒரு கட்டுமான பணியில் வெல்டிங் வேலை நடந்தது . அதில் ஈடுபட்டிருந்த கௌதம் எதிர்பாராத விதமாக 30 அடி உயரத்திலிருந்து கீழே விழுந்தார். இதில் அவரது தலையில் பலத்த காயம் ஏற்பட்டது , சக தொழிலாளர்கள் அவரை மீட்டு திருச்சி அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார் . மேலும் கௌதம் சிகிச்சை இன்றி பரிதாபமாக உயிரிழந்தார். இது குறித்து ஏர்போர்ட் போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

## திருச்சி மேல கல்கண்டார் கோட்டையில் 2 குழந்தைகளின் தாய் தூக்கு போட்டு தற்கொலை போலீசார் உடலை கைப்பற்றி விசாரணை:

திருச்சி டிச 20

திருச்சி மேல கல்கண்டார் கோட்டை இந்திரா காந்தி நகர் நடுத்தெரு பகுதியை சேர்ந்தவர் செல்வ பிரபு இவரது மனைவி தமிழ் பிரியா வயது (32) இந்த தம்பதிகளுக்கு 8 ஆண்டுகளுக்கு முன்பு திருமணம் ஆன நிலையில் இரண்டு பெண் குழந்தைகள் உள்ளனர் . தமிழ் பிரியா அறுவை சிகிச்சை மூலம் இரண்டு குழந்தைகளையும் பெற்றெடுத்தார், இதனால் அவருக்கு சிறு சிறு உடல் நல பாதிப்புகள் ஏற்பட்டு வந்தன, இதனால் அவர் மிகுந்த மன அழுத்தத்துக்கு ஆளானார் , இந்நிலையில் வழக்கம்போல் செல்வ பெயிண்டிங் வேலைக்கு சென்றார். பின்னர் மாலை வீடு திரும்பிய போது மனைவி தமிழ் பிரியா தூக்கில் பிணமாக தொங்கி கொண்டிருப்பது பார்த்து அதிர்ச்சியில் உறைந்தார்.பின்னர் இது பற்றி பொன்மொழி போலீசில் புகார் செய்யப்பட்டது, தமிழ் பிரியாவின் சகோதரர் வீரசாமி கொடுத்த புகாரின் அடிப்படையில் பொன்மொழி போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.



அமைச்சர் கே.என். நேரு, அமைச்சர் முனைவர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி ஆகியோர் திருச்சிராப்பள்ளி, துவாக்குடி அரசு மேல்நிலைப்பள்ளியில் அமைக்கப்பட்டுள்ள எந்திரவியல் ஆய்வகத்தை திறந்து வைத்து, கையேடுகளை வெளியிட்டு எந்திரவியல் ஆய்வகங்களின் செயல்பாடுகளை பார்வையிட்டு மாணவ, மாணவிகளுடன் கலந்துரையாடினார். இந்நிகழ்வில் மாநில திட்ட இயக்குனர் ஆர்த்தி, பள்ளிக்கல்வி இயக்குனர் மனைவர் கண்ணப்பன், தொடக்கக்கல்வி இயக்குனர் நரேஸ்,, இணை இயக்குனர் குமார், மாவட்ட வருவாய் அ லுவலர் பாலாஜி, நகராட்சிகளின் நிர்வாக மண்டல இயக்குனர் தானுமூர்த்தி, துவாக்குடி நகர்மன்ற தலைவர் காயாம்பு, முதன்மை கல்வி அலுவலர் கிருஷ்ணனப்பிரியா மற்றும் அரசுத்துறை அலுவலர்கள், ஆசிரியர்கள் மாணவ, மாணவிகள் கலந்து கொண்டனர்.



திருச்சிராப்பள்ளி மாவட்ட கண்காணிப்பு அலுவலர்/ அரசு செயலாளர் சஜ்ஜன்சிங் ஆர்.சாவன், மாவட்ட ஆட்சித்தலைவர் சரவணன் முன்னிலையில் திருச்சிராப்பள்ளி மாநகராட்சிக்குட்ட ராஜா காலனி வார்டு எண் 54ல் உள்ள மாரிஸ் அவன்யூ, குமுளிதோப்பு, ராஜா காலனி 6வது தெரு மற்றும் புதிய ராஜா காலனி பிரதான சாலை ஆகிய பகுதிகளில் சிறப்பு நிதி திட்டத்தின் கீழ் ரூ.50.50 லட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள தார் சாலையை நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.இந்நிகழ்வில் நகர பொறியாளர் சிவபாதம், செயற் பொறியாளர் பாலசுப்பிரமணியன், உதவி செயற் பொறியாளர் வேல்முருகன், உதவி ஆணைர் சண்முகம் உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.

## ஈரோட்டில் பேருந்தில் மாணவர்கள் ஆபத்தான பயணம்... கண்டுகொள்ளாத போக்குவரத்து காவல்துறை...

ஈரோடு. டிச. 20




ஈரோட்டில் பள்ளி கல்லூரி செல்லும் மாணவர்கள் ஆபத்தான முறையில் பேருந்தில் பயணம் செய்து வருகின்றனர். நடவடிக்கை எடுக்க வேண்டிய போக்குவரத்து காவல்துறை கண்டும் காணாமல் இருந்து வருகிறது.

ஈரோடு மாநகர் பகுதியில் உள்ள அரசு மற்றும் தனியார் பேருந்துகளில், பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்கள் பேருந்தின் படிக்கட்டுகளில் நின்று ஆபத்தான பயணத்தை மேற்கொண்டு வருகின்றனர்.

காலை மற்றும் மாலை நேரங்களில் போக்குவரத்து நெரிசல் அதிகமாக இருக்கும் நேரத்தில் ஈரோடு பகுதிகளில் செல்லும் பேருந்துகளில் பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்கள் ஆபத்தான முறையில் பேருந்துகளில் அவர்கள் செய்யும் பயணம் விபரீதத்தை ஏற்படுத்தும் என பொதுமக்கள் அச்சம் தெரிவிக்கின்றனர்.

மேலும் இவ்வாறு மாணவர்களின் ஆபத்தான பேருந்து பயணம் குறித்து பள்ளி மற்றும் கல்லூரிகளில் விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும் என்றும், அவர்களின் பெற்றோர்கள் அந்த மாணவர்களை கண்டித்து அறிவுரை கூற வேண்டும் என்றும் பொதுமக்களின் வேண்டுகோளாக உள்ளது.மேலும் இவர்கள் செய்யும் இந்த அட்ராசட்டியால் பேருந்தில் பயணிக்கும் மற்ற பயணிகளுக்கும் இடையூறாக இருப்பதாகவும் தெரிகிறது. எனவே இவ்வாறு பேருந்துகளில் படிக்கட்டுகளில் நின்று ஆபத்தான பயணம் மேற்கொள்ளும் மாணவர்களை கண்டித்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என போக்குவரத்து காவல்துறைக்கு பொதுமக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். கண்டம் காணாமல் உள்ள காவல் போக்குவரத்து காவல்துறையினர் கொஞ்சம் கவனித்து நடவடிக்கை எடுத்தால் நல்லது.

## பரமக்குடியில் டிச.20 ம்தேதி நாளை மின்தடை.

ராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடி நகர் மின்வாரியம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் கூறியுள்ளதாவது :

பரமக்குடி 110 கே.வி. உபமின் நிலையத்தில் டிச 20 ம் தேதி (சனிக் கிழமை) மாதாந்திர மின் பராமரிப்பு பணிகள் நடைபெற உள்ளது. எனவே அன்று காலை 10 மணி முதல் மாலை 5 மணி வரை பரமக்குடி நகர் முழுவதும் (அரசு கலைக் கல்லூரி பகுதி தவிர), சத்திரக்குடி, நயினார்கோவில், கமுதக்குடி, சிட்கோ, பெருமாள் கோவில், எமனேஸ்வரம்,மஞ்சூர், என்.டி.சி. நூற்பாலை மற்றும் அருகில் உள்ள இதர பகுதிகளில் மின் விநியோகம் இருக்காது என கூறியுள்ளனர்.

## பெயிண்ட் தொழிலாளி வேண்டுகோள்.



சேலம் மாவட்டம்,அம்மாபேட்டை கனகசபாபதி தெரு துணிக்கடை உரிமையாளர் கே.கண்ணன் வீட்டில் பெயிண்ட் வேலை செய்து கொண்டிருந்த தொழிலாளி(நாகராஜ்)தவறி கீழே விழுந்த நிலையில் கழுத்து,முதுகு எலும்புகள் உடைந்து மண்டையில் அடிபட்டு அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார்.சம்பந்தப்பட்ட கண்ணன் உதவுவதாக கூறிய நிலையில் எந்த ஒரு செலவினமும் செய்ய மாட்டேன்,காவலரிடம் புகார் அளித்தாலும் பார்த்துக் கொள்ளலாம் என மிரட்டுவதாகவும் தொழிலாளியின் உறவினர்கள் புகார்.



சேலம் மாவட்ட ஆட்சியரகத்தில் விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா.பிருந்தாதேவி தலைமையில் நடைபெற்றது. உடன் மாவ் வருவாய் அலுவல் இரா. ரவிக்குமார், வேளாண்மை இணை இயக்குனர் சீனிவாசன், கால்நடை பராமரிப்புத்துறை மண்டல இணை இயக்குனர் மரு. அர.பிரகாசம், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் கமலம், உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் மற்றும் விவசாயிகள் உள்ளனர்.

# போராட்டத்தில் ஈடுபட்ட செவிலியர்கள் கைது.

## அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி கண்டனம்.



சென்னை டிச 20

பணி நிரந்தரம் செய்ய வேண்டும் என தமிழக அரசை வலியுறுத்தி, தமிழ்நாடு முழுவதும் தொகுப்பு ஊதியத்தில் பணிபுரியும் 1,500க்கும் மேற்பட்ட செவிலியர்கள் நேற்று (181225) சென்னை சிவானந்தம் சாலையில் ஆர்ப்பாட்டம் செய்தனர்.

காலை தொடங்கிய இப்போராட்டம், மாலை 6 மணிக்கு மேலாக நீடித்தது.

அதனை தொடர்ந்து காவல்துறையினர், போராட்டம் நடத்திய செவிலியர்களை கைது செய்து பேருந்துகள் மூலமாக அவர்களை அழைத்துச் சென்று கிளாம்பாக்கம் பேருந்து நிலையத்தில் இறக்கி விட்டனர். ஆனால், செவிலியர்கள் அங்கு அமர்ந்து போராட்டம் நடத்தியதால், அவர்களை மீண்டும் கைது அருகில் உள்ள தனியார் மண்டபத்தில் அடைத்து வைத்தனர்.

இந்த சம்பவத்திற்கு தமிழக எதிர்க்கட்சித் தலைவரும், அதிமுக பொதுச்செயலாளருமான எடப்பாடி பழனிசாமி கடும் கண்டனம் தெரிவித்துள்ளார். இது குறித்து எடப்பாடி பழனிசாமி தனது எக்ஸ் பக்கத்தில் தெரிவித்துள்ளதாவது, 'விடியா திமுக அரசு, 2021 சட்டமன்ற பொதுத் தேர்தலின்போது செவிலியர்களுக்கு அளித்த வாக்குறுதி எண் 356ஐ நிறைவேற்றக் கோரியும், ஜெயலலிதாவின் அரசால் கொரோனா காலகட்டத்தில் பணியமர்த்தப்பட்டு, தற்போதைய விடியா திமுக அரசால் பணிநீக்கம் செய்யபட்ட அனைத்து செவிலியர்களுக்கும் மீண்டும் பணி வழங்க வேண்டும் உள்ளிட்ட பல வாக்குறுதிகளை நிறைவேற்றக்கோரி பல்வேறு போராட்டங்களை நடத்தி வருகின்றனர்.

அதன் தொடர்ச்சியாக (18.12.2025) தமிழ்நாடு செவிலியிர்கள் மேம்பாடு சங்கத்தின் சார்பாக அவர்களது கோரிக்கைகளை நிறைவேற்ற வலியுறுத்தி சென்னை சிவானாந்தா சாலையில் உண்ணா விரதப் போராட்டத்தில் ஈடுபட்டனர். இந்தப் போராட்டத்தில் தமிழகம் முழுவதும் இருந்து வந்திருந்த ஆயிரக் கணக்கான செவிலியர்கள் கலந்து கொண்டனர். நேற்று இரவு 7.30 மணிக்கு காவல் துறை போராட்டத்தில் ஈடுபட்டு வந்த சுமார் 1000க்கும் மேற்பட்ட செவிலியர்களை கைது செய்து அவர்களை பேருந்துகள் மூலமாக அழைத்துச் சென்று கிளாம்பாக்கம் பேருந்து நிலையத்தில் இறக்கிவிட்டனர்.

இறக்கிவிடப்பட்ட செவிலியர்கள், கிளாம்பாக்கம் பேருந்து நிலையத்திலேயே தங்களது கோரிக்கைகள் நிறைவேறாமல் கலையமாட்டோம் எனக்கூறி விடியா திமுக அரசுக்கு எதிரான கோஷங்களுடன் போராட்டத்தில் ஈடுபட்டதை தொடர்ந்து, விடியா திமுக அரசின் காவல்துறை அவர்களை மீண்டும் கைதுசெய்து அருகிலுள்ள தனியார் திருமண மண்டபத்தில் அடைத்து வைத்துள்ளனர். 2021 சட்டமன்றத் தேர்தலின் போது அளித்த வாக்குறுதியை நிறைவேற்றக் கோரி கடந்த நான்கரை ஆண்டுகளாக போராட்டத்தில் ஈடுபட்டு வரும் செவிலியர்களை உடனடியாக விடுவிப்பதுடன், 2021 சட்டமன்றப் பொதுத் தேர்தலின்போது திமுக அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்ற விடியா திமுக, ஃபெயிலியர் மாடல் ஸ்டாலின் அரசை வலியுறுத்துகிறேன்' எனத் தெரிவித்துள்ளார்.




பாரதிய ஜனதா கட்சி தமிழ்நாடு மாநில மகளிர் அணி பயிற்சி முகாம் இன்று மதுக்கரை கோவை பார்ம்ர்ஸ் அசோசியேஷன் வளாகத்தில் கோவை தெற்கு மாவட்டம் சார்பாக நடைபெற்றது. இதில் தேசிய மகளிர் அணி தலைவர் திருமதிவானதி சீனிவாசன், மாநில மகளிர் அணி தலைவர் திருமதி கவிதா ஸ்ரீகாந்த், மாநில மகளிர் அணி பொதுச் செயலாளர் திருமதி வித்தியாலமேஷ், மாநில மகளிர் அணி செயலாளர் திருமதி அருணாதேவி மோகன்ராஜா ஆகியோர் கலந்து கொண்டனர்.

# கோயம்புத்தூர் கொடிசியா ஷாப்பிங் திருவிழா 2025 டிச:24ம் தேதி துவக்கம்!!




கோவை டிச:20

கோவை மாவட்டம் கொடிசியா வளாகத்தில் 'கோயம்புத்தூர் ஷாப்பிங் திருவிழா 2025' நடைபெற உள்ளது. இதுகுறித்து செய்தியாளர்கள் சந்திப்பில் ஷாப்பிங் திருவிழாவின் தலைவர் நந்தகோபால், கொடிசியா தலைவர் கார்த்திகேயன் ஆகியோர் கூறியதாவது, கோவை கொடிசியா வளாகத்தில் டிச.24ம் தேதி முதல் ஜனவரி 1ம் தேதி கோயம்புத்தூர் ஷாப்பிங் திருவிழா 2025ன் 11வது பதிப்பு நடைபெற உள்ளது.

சுமார் ஒன்றரை லட்சம் சதுர அடி பரப்பளவில் மெகா ஷாப்பிங் திருவிழா நடைபெற உள்ளது. இந்தக் கண்காட்சியில் சுமார் 350க்கும் மேற்பட்ட நிறுவனங்கள் கலந்து கொள்ள உள்ளனர். குழந்தைகள், பெரியவர்கள் என அனைவருக்கும் பல்வேறு பொழுதுபோக்கு நிகழ்ச்சிகள், விளையாட்டு அரங்குகள், உணவு அரங்கங்கள் அமைக்கப்பட உள்ளது.

இந்த ஷாப்பிங் திருவிழாவில் வீட்டு உபயோக சாதனங்கள், சமையலறை பொருட்கள், பர்னிச்சர்ஸ், தங்கம் மற்றும் வைர நகைகள், ஐவுளி வகைகள், உடற்பயிற்சி சாதனங்கள், பரிசு பொருட்கள்,சூரிய ஒளி சாதனங்கள், காலணிகள், பாரம்பரிய ஓவியங்கள், கைவினைப் பொருட்கள், ஆட்டோ மொபைல் உதிர் பாகங்கள், சுற்றுலா செல்வதற்கான தகவல் அரங்குகள், நிதி நிறுவனங்கள் என நுகர்வோர்களின் அனைத்து விதமான தேவைகளையும் பூர்த்தி செய்யும் விதமாக இந்த கண்காட்சி அமைய உள்ளது. இந்த கண்காட்சிக்கான நுழைவு கட்டணம் ரூ.50 என வசூல் செய்யப்படும் என தெரிவித்தனர்.

கிறிஸ்துமஸ், புத்தாண்டு பண்டிகைகள் வர உள்ளது. வீட்டிற்கு தேவையான பொருட்கள் வாங்கநினைப்போர் இங்கு சென்று குடும்பத்துடன் ஷாப்பிங்செய்துமகிழலாம். இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர். பேட்டியின் போது. கொடிசியா செயலாளர் யுவராஜ், கண்காட்சி துணைத் தலைவர் வரதராஜ் ஆகியோர் உடன் இருந்தனர்.

# கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தின் கீழ் , இரண்டாம் கட்டமாக 50,648 மகளிருக்கு மாதந்தோறும் ரூ.1000 பெறுவதற்கான வங்கி பற்று அட்டைகள் வழங்கப்பட்டுள்ளது.

## இத்திட்டத்தின் கீழ் பயனடைந்த பயனாளிகள் நிறைந்தது மனம் நிகழ்ச்சியில் தமிழ்நாடு முதலமைச்சருக்கு தங்கள் மனமார்ந்த நன்றியினை தெரிவித்துள்ளார்கள்.




கோவை டிச:20

தமிழ்நாட்டில் மேற்கொள்ளப்பட்ட மகளிருக்கான ஒரு மாபெரும் முன்னெடுப்பாக,மகத்தான கலைஞர் மகளிர் உரிமைத் தொகை வழங்கும் திட்டம் ஏறத்தாழ ஒருகோடி குடும்பத்தலைவிகளுக்கு,மாதம் 1000 ரூபாய் வழங்கிடும் வகையில் அமைந்திடும்"என தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 27.03.2023 அன்று தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டு, பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்தநாளான 15.9.2023 அன்று காஞ்சிபுரத்தில் முதல் கட்டமாக சுமார் 1.13 கோடி பயனாளிகள் பயன்பெறும் வகையில் கலைஞர் மகளிர் உரிமைத் தொகை வழங்கும் திட்டத்தை தமிழ்நாடு முதலமைச்சர் தொடங்கி வைத்தார்.கலைஞர் மகளிர் உரிமைத் தொகையானது ஒவ்வொரு மாதமும் 15ஆம் தேதி மகளிருக்கே நேரடியாக சென்றடையும் வகையில் அவர்களது வங்கிக் கணக்கில் வரவு வைக்கப்பட்டு வருகிறது. பெண்களின் உழைப்பை அங்கீகரிக்கும் வகையில் செயல்படுத்தப்படும் இத்திட்டம், மேலும்,16 இலட்சத்து 94 ஆயிரத்து 339 மகளிர் பயனடையும் வகையில்,கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டத்தின் 2ஆம் கட்ட விரிவாக்கத்தை 12.12.2025 அன்று தொடங்கி வைத்து,தமிழ்நாடு முதலமைச்சர் மகளிர்க்கு உரிமைத்தொகைக்கான வங்கி பற்று அட்டைகளை (ATM Cards) வழங்கினார்.கோவை மாவட்டத்தில் கடந்த 2023 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட கலைஞர் மகளிர் உரிமைத்திட்டத்தின் கீழ் முதற்கட்டமாக கோவை வடக்கு சட்டமன்ற தொகுதியை சேர்ந்த 40239 மகளிருக்கும், கோவை தெற்கு சட்டமன்ற தொகுதியை சேர்ந்த 5695 மகளிருக்கும், கவுண்டம்பாளையம் சட்டமன்ற தொகுதியை சேர்ந்த 68137 மகளிருக்கும்,சிங்காநல்லூர் சட்டமன்ற தொகுதியை சேர்ந்த 24,800 மகளிருக்கும், தொண்டாமுத்தூர் சட்டமன்ற தொகுதியை சேர்ந்த 62,113 மகளிருக்கும், சூலூர் சட்டமன்ற தொகுதியை சேர்ந்த 45,311 மகளிருக்கும் ,மேட்டுப்பாளையம் சட்டமன்ற தொகுதியை சேர்ந்த 50,558 மகளிருக்கும், கிணத்துக்கடவு சட்டமன்ற தொகுதியை சேர்ந்த 56,627 மகளிருக்கும், பொள்ளாச்சி சட்டமன்ற தொகுதியை சேர்ந்த 34,355 மகளிருக்கும், வால்பாறை சட்டமன்ற தொகுதியை சேர்ந்த 37,870 மகளிருக்கும், என மொத்தம் 4,25,705 மகளிருக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.1000/வீதம் ஒரு வருடத்திற்கு ரூ.510.84 கோடி தொகையானது வழங்கப்படுகிறது. அதனைத்தொடர்ந்து தற்போது இரண்டாம் கட்டமாக கோவை மாவட்டத்தில் கடந்த ஜீலை மாதம் முதல் நடத்தப்பட்ட உங்களுடன் ஸ்டாலின் சிறப்பு முகாம்களின் மூலம் பொது மக்களிடமிருந்து பெறப்பட்ட கலைஞர் மகளிர் உரிமைத் தொகை கோரிய 1,74,599 விண்ணப்பங்களை கள ஆய்வு செய்து ஆனைமலை வட்டாரத்தில் 3253 மகளிருக்கு ரூ.3.90 கோடி மதிப்பிலும், அன்னூர் வட்டாரத்தில் 2801 மகளிருக்கு ரூ.3.36 கோடி மதிப்பிலும், கோவை வடக்கு வட்டாரத்தில் 12,548 மகளிருக்கு ரூ.15.05 கோடி மதிப்பிலும், கோயம்புத்தூர் தெற்கு வட்டாரத்தில் 5360 மகளிருக்கு ரூ.6.43 கோடி மதிப்பிலும், கிணத்துக்கடவு வட்டாரத்தில் 1547 மகளிருக்கு ரூ.1.85 கோடி மதிப்பிலும், மதுக்கரை வட்டாரத்தில் 5265 மகளிருக்கு ரூ.6.31 கோடி மதிப்பிலும், மேட்டுப்பாளையம் வட்டாரத்தில் 3800 மகளிருக்கு ரூ.4.56 கோடி மதிப்பிலும், பேரூர் வட்டாரத்தில் 4929 கோடி மதிப்பிலும், பொள்ளாச்சி வட்டாரத்தில் 4191 கோடி மதிப்பிலும், சூலூர் வட்டாரத்தில் 6190 மகளிருக்கு ரூ.7.42 கோடி மதிப்பிலும், வால்பாறை வட்டாரத்தில் 764 மகளிருக்கு ரூ.91.68 இலட்சம் மதிப்பிலும் என மொத்தம் 50,648 மகளிருக்கு தற்போது இரண்டாம் கட்டமாக மாதம் ரூ.1000/ வீதம் ஒரு மாதத்திற்கு ரூ.5.06 கோடி வீதமும் ஆண்டிற்கு ரூ.60.77 கோடி மகளிர் உரிமைத்தொகை அவர்களது வங்கி கணக்கு மூலம் வழங்கப்பட உள்ளது.

கோவை மாவட்டத்தில் கலைஞர் மகளிர் உரிமைத்தொகை திட்டத்தின் கீழ் முதல் மற்றும் இரண்டாம் கட்டம் என மொத்தம் 4,76,353 மகளிருக்கு மாதம் ரூ.1000/ வீதம் ஒரு மாதத்திற்கு ரூ.47.63 கோடி தொகையும்,ஒரு ஆண்டிற்கு ரூ.571 கோடி தொகையானது வழங்கப்படுகிறது.

நிறைந்தது மனம் நிகழ்ச்சியில் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தின் கீழ் பயனடைந்த செட்டிபாளையம் பேரூராட்சியை சேர்ந்த பயனாளி பூமணி தெரிவித்ததாவது,

என் பெயர் பூமணி. நான் போத்தனூர் செட்டிபாளையம் பேரூராட்சியில் கோனார் வீதியில் வசித்து வருகிறேன். எனது கணவர் பெயர் சண்முகம்,லாரி டிரைவராக வேலை செய்து வருகிறார். எனக்கு இரண்டு குழந்தைகள். என் பொண்ணுக்கு கல்யாணம் ஆகிவிட்டது.தற்போது என்



மகன் மட்டும் எங்களுடன் வசித்து வருகிறான்.குடும்பம் ஏழ்மையானது.இந்நிலையில் தமிழ்நாடு முதலமைச்சரின் கலைஞர் உரிமைத்திட்டம் குறித்து அறிந்து எங்கள் பகுதியில் நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் முகாமில் கலந்துகொண்டு விண்ணப்பித்தேன்.தற்போது இத்திட்டத்தின் கீழ் தகுதியான பயனாளியாக தேர்வு செய்யப்பட்டு, ரூ.1000 என்னுடைய வங்கி கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளது. என்னுடைய அவசிய தேவைக்கான செலவினை மேற்கொள்ள இந்த தொகை மிகவும் உதவிகரமாக அமைந்துள்ளது.இத்திட்டத்தின் மூலம் எங்கள் வாழ்வில் ஒளியேற்றிய தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு என் மனமார்ந்த நன்றியினை தெரிவித்துக்கொள்கிறேன்.

**ஆ.செந்தில் அண்ணா**
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
**இரா.சரண்**
உதவி மக்கள் தொடர்பு அலுவலர்(செய்தி)
கோயம்புத்தூர் மாவட்டம்.

இருக்கும் போது ரத்ததானம்.... இறந்த பின் கண்தானம் செய்வீர்...

# அந்த ஒரு காரணத்தால் சிதைந்த குடும்பம்.

## பரிதவிப்பில் 2 குழந்தைகள்,கொடூரனாக மாறிய கணவன்.

சேலம். டிச. 20–

சேலம் மாவட்டம் ஓமலூர் அருகே பூமிநாயக்கன்பட்டி பகுதியைச் சேர்ந்தவர் பிரகாஷ் (31).சேலத்தில் சுமைதூக்கும் தொழிலாளியாக வேலை செய்து வந்தார்.

இவருக்கும், சேலம் சூரமங்கலம் பகுதியைச் சேர்ந்த ரத்தினம்மாள் (25) என்பவருக்கும் கடந்த 8 ஆண்டுகளுக்கு முன்பு காதல் திருமணம் நடைபெற்றது. இந்த தம்பதிக்கு ஷாலினி (7), மாலினி (5) என்ற இரண்டு மகள்கள் உள்ளனர்.

கடந்த சில மாதங்களாக கணவன்மனைவி இடையே குடும்பத் தகராறு இருந்து வந்ததாக கூறப்படுகிறது. குறிப்பாக, மனைவி மீது சந்தேகப்பட்ட பிரகாஷ், அடிக்கடி ரத்தினம்மாளுடன் சண்டையிட்டு, தாக்கி வந்ததாக தெரிகிறது.

இந்த நிலையில், நேற்று முன்தினம் காலை மீண்டும் இருவருக்கும் இடையே தகராறு ஏற்பட்டுள்ளது. அப்போது ஆத்திரமடைந்த பிரகாஷ், வீட்டில் இருந்த இரும்புக் கம்பியால் ரத்தினம்மாளை தாக்கியுள்ளார். இதில் பலத்த காயமடைந்த ரத்தினம்மாள் மயங்கி விழுந்தார்.

சத்தம் கேட்டு அக்கம்பக்கத்தினர் ஓடி வந்து, ரத்தினம்மாளை மீட்டு அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். அங்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டும், சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் மாலை அவர் பரிதாபமாக உயிரிழந்தார்.

இதுகுறித்து, உயிரிழந்த ரத்தினம்மாளின் தாயார் நவமணி, காவல் நிலையத்தில் புகார் அளித்தார். அதன் பேரில் காவல்துறையினர் வழக்குப் பதிவு செய்து, மனைவியை அடித்துக் கொலை செய்ததாக குற்றம் சாட்டப்பட்ட பிரகாஷை கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். மேலும் இந்த சம்பவம் அந்த பகுதியில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

# லாரல் பள்ளிக் குழுமங்கள் சார்பாக நடைபெற்ற 31வது ஆண்டு விழா மற்றும் கிறிஸ்துமஸ் விழா

## சிறப்பு விருந்தினர்களாகப் பிரபல தன்னம்பிக்கை பேச்சாளர் பர்வீன் சுல்தானா மற்றும் பாஸ்டர் ஜான்சன் சத்யநாதன் ஆகியோர் பங்கேற்பு!!




கோவைடிச.20

கவுண்டம்பாளையம் பகுதியில் உள்ள லாரல் கல்விக் குழுமங்களின் லாரல் மெட்ரிக் பள்ளி மற்றும் பென்கிலென் பப்ளிக் பள்ளி சார்பாக 31 வது ஆண்டு விழா மற்றும் கிறிஸ்துமஸ் விழா பள்ளி வளாகத்தில் வெகு விமரிசையாக நடைபெற்றது..

பள்ளியின் தாளாளர் ஃபிராங்க் டேவிட் தலைமையில் , இணை தாளாளர் அபிஷேக் பால் ஜாக்சன், முன்னிலையில் விழா மிகச் சிறப்பாக நடைபெற்றது.

விழாவில் சிறப்பு விருந்தினராகப் பிரபல தன்னம்பிக்கை பேச்சாளர் பர்வீன் சுல்தானா கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.

கௌரவ விருந்தினராக டிரினிட்டி மினிஸ்ட்ரீஸ் பாஸ்டர் ஜான்சன் சத்யநாதன் கலந்து கொண்டு கிறிஸ்துமஸ் வாழ்த்துச் செய்தியைப் பகிர்ந்து கொண்டார்..

நிகழ்ச்சியில்,பள்ளி மாணவர்களின் பல்வேறு கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. இதில் கலந்து கொண்ட மாணவர்கள் உற்சாகமாகப் பாடல்கள் பாடியும், நடனங்கள் ஆடியும் தங்கள்,மகிழ்ச்சியை வெளிப்படுத்தியதோடு குறுநாடகங்கள் மூலமாக கிறிஸ்துவின் பிறப்பின் பண்டிகையை அனைவருக்கும் அறிவித்தனர்.

தொடர்ந்து பள்ளியில் கடந்த ஆண்டில் சிறந்த மதிப்பெண்கள் எடுத்த மாணவர்கள் மற்றும் விளையாட்டு உள்ளிட்ட பல்வேறு போட்டிகளில் கலந்து கொண்டு பள்ளிக்குப் பெருமை சேர்த்த மாணவர்களுக்குப் பரிசுகள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டது.

லாரல் மெட்ரிக் பள்ளியின் நிர்வாகிகள் ஃபிராங்க் மற்றும் அபிஷேக் ஆகியோர் கூறுகையில், லாரல் பள்ளியில் ஒவ்வொரு ஆண்டும் கல்வி கற்பிப்பதோடு மாணவர்களின் திறன்களை ஊக்குவிக்கும் விதமாகப் பல்வேறு போட்டிகள் நிகழ்ச்சிகள் நடைபெற்று வருவதாகத் தெரிவித்தனர்.

நிகழ்ச்சியில் கிறிஸ்ஸி அபிஷேக் பால் மற்றும் பள்ளி ஆசிரியர்கள், பெற்றோர்கள், மாணவ,மாணவிகள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

Published by **K.SABIULLA**,printed by **K.SABIULLA**, on behalf of **K.SABIULLA**, printed at **BEAUTIFUL** printers 6/1 devaraja Street,Triplicane chennai 600005.
puplished at 378/46.10th cross,Rajevnagar,manaparai trichy(dis) editor:**K.SABIULLA**, cell.78100-68421